# புனித வார கையேடு 2020

## குடும்பம் மற்றும் வீட்டிலுள்ளோர்களுக்காக

### (கோவிட்-19 தொற்றுநோயின் காலத்தில்)

குடும்பம் மற்றும் வீட்டிலுள்ளோர் திட்டமிட்ட நேரத்தில் கூடி செபிக்க வேண்டும்

தனியார் பயன்பாட்டிற்கு மட்டுமே

# கிறிஸ்துவின் உடலோடு ஒன்றித்திருங்கள்



நீங்கள் கிறிஸ்துவின் உடல்: ஒவ்வொருவரும் அதன் தனித்தனி உறுப்புகள். அவ்வாறே திருச்சபையிலும் கடவுள் முதலாவது திருத்தூதர்களையும், இரண்டாவது இறைவாக்கினர்களையும், மூன்றாவது போதகர்களையும், பின்னர் வல்லசெயல் செய்வோர்களையும், அதன்பின் பிணி தீர்க்கும் அருள்கொடை பெற்றவர்கள், துணைநிற்பவர்கள், தலைமையேற்று நடத்துபவர்கள், பல்வகை பரவசப்பேச்சு பேசுகிறவர்கள் ஆகியோரையும் ஏற்படுத்தினார். *(1 கொரிந்தியர் 12: 27-28)*

# தெய்வீக இயேசுவுடன் ஒரு பயணம்

*அன்பு இயேசு ஆண்டவரே,*

இவ்வாரம் நாங்கள் உம்மோடு நெருக்கமாக இணைந்து உமது திருப்பாடுகள், மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில் மூழ்கி உம்மோடு பயணிக்கின்றோம், இங்கு ஒன்றுகூடியுள்ள நாங்கள், உம்மோடு ஆன்மீக ரீதியில் ஒன்றித்திருக்க எங்களுக்கு உதவி அருளும்.

சிறிய, ஆனால் அர்த்தமுள்ள வழிகளில் ஒருவருக்கொருவர் ஆசீர்வாதமாக இருக்க எங்களுக்கு உதவியருளும். ஆண்டவராகிய இயேசுவே, எங்கள் செயல்கள் பரிவுள்ளதாகவும் மென்மையானதாகவும் இருக்க, எங்கள் வார்த்தைகள் அறமுள்ளதாகவும் நியாயமற்றதாகவும் இருக்க, எங்கள் எண்ணங்கள் மனத்தாழ்மையும் மன்னிப்பும் கொண்டதாகவும் இருக்க, நாங்கள் ஒருவருக்கொருவர் அன்போடும் பொறுமையோடும் இருக்க பாடுபடவும் கற்றுத்தாரும்.

ஒருவருக்கொருவர் இடையே உள்ள ஒற்றுமையானது எங்கள் அன்பின் பரிசாகவும் மேலும் உலகத்தின் நன்மைக்காக நம்பிக்கையும் குணப்படுத்துதலையும் நாங்கள் ஒப்புக்கொடுக்கின்றோம். ஆமென்.

# ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு



# ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு

DIOCESE OF PENANG

உன்னதங்களிலே ஓசன்னா, ஓசன்னா, ஓசன்னா (2X)

*ஆண்டவரே, எங்கள் உள்ளத்தின் முழு புகழ்ச்சியுடன், நாங்கள் உம் பெயரை உயர்த்துகிறோம், ஓ ஆண்டவரே, எங்கள் இறைவனே, உன்னதங்களிலே ஓசன்னா!*

அரசர்களின் அரசருக்கே மாட்சி, மாட்சி மாட்சி! (2X)

# ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு

DIOCESE OF PENANG

† *தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே, ஆமென்* †

***<u>எல்லாரும் ஒன்றாக:</u>***

**ஆண்டவராகிய இயேசுவே, எங்கள் மீது கொண்ட அன்பினால், நீர் இப்பூமியில் செய்த மிக முக்கியமான காரியங்களை நாங்கள் நினைவில் வைத்து ஒன்றுகூடி இருக்கும் இவ்வேளையில், எங்கள் மத்தியில் வந்தருளும். முற்காலத்தில உமது வாழ்க்கையையும் உமது பணியையும் சிந்தித்த முதல் மக்களோடு நாங்களும் சேர்ந்து, இப்போழுது உமது வார்த்தையை கேட்கின்றோம்.**

# ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு

DIOCESE OF PENANG

***திருத்தூதர் தூய பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 2: 6-11***

கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். ஆகவே இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர்; தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக "இயேசு கிறிஸ்து ஆண்டவர்" என எல்லா நாவுமே அறிக்கையிடும்.

**ஆண்டவரின் அருள்வாக்கு.** ***பதில்: இறைவனுக்கு நன்றி***

# ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு

DIOCESE OF PENANG

## *ஒரு நிமிட சிந்தனை*

நமது தாழ்மையான அரசர், சக்தியையும் வலிமையையும் குறிக்கும் குதிரையின் மேல் எருசலேமுக்குள் நுழையவில்லை. மாறாக, அவர் ஒரு இளம் கழுதை மீது சவாரி செய்து நகரத்திற்குள் நுழைந்தார், இது அமைதியின் அடையாளத்தைக் குறிக்கிறது. அரச ஊழியரான, இயேசு, சிலுவையை அன்பு நிறைந்த இதயத்துடன், தனிப்பட்ட முறையில், உங்களுக்காகவும் எனக்காகவும் விரும்பி ஏற்றுக்கொள்கிறார்.

அவரது தன்னலமற்ற தியாகத்திற்கு நான் நன்றியுள்ளவனான இருக்கிறேன் என்பதை என் அன்றாட வாழ்க்கை பிரதிபலிக்கிறதா? என் வாழ்க்கையில், நான் மனத்தாழ்மையுடன் போராடும் பகுதிகள் உள்ளனவா? இதற்கு அடிப்படை காரணம் இயேசு எனக்கு முற்றிலும் முதன்மையானராக இல்லாததால். என் தாழ்மையான அரசரான இயேசுவோடு நான் நெருக்கமாக நடப்பேனாக.

# ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு

DIOCESE OF PENANG

## ஆண்டவரிடம் மன்றாடுவோம்

அகில உலக திருச்சபைக்காக மன்றாடுவோம், இந்த புனித வாரத்தில் நமது நம்பிக்கையின்-அனுபவத்தை தனிப்பட்ட முறையில் புதுப்பிக்கவும், மாற்றவும் மற்றும் பலப்படுத்தவும் ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

***கிறிஸ்து ஆண்டவரே, எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.***

உலகின் எல்லா நாடுகளுக்காக மன்றாடுவோம், இந்த வாழ்வு, மரணம் ம்றறும் உயிர்த்தெழும் அனுபவத்தின் வழியாக, நாம் கடவுளோடு எல்லா மனிதர்களையும் தழுவிக்கொள்ள இந்த தொற்றுநொயை ஒன்றாக எதிர்க்க ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

***கிறிஸ்து ஆண்டவரே, எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.***

எல்லா குடும்பங்களுக்காக மன்றாடுவோம், இந்த அருள் பயணத்தின் வழி ஒற்றுமை பலப்படவும், அன்பு மீட்டெடுக்கப்படவும், பொறுமையும் புரிந்துணர்வும் அதிகரிக்கவும் ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

***கிறிஸ்து ஆண்டவரே, எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.***

# ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு

## ஆண்டவரிடம் மன்றாடுவோம்

ஒடுக்கப்பட்ட மற்றும் கைவிடப்பட்டவர்களுக்காக மன்றாடுவோம், நாம் இயேசுவின் பார்வையில் இவர்களுடைய போராட்டங்களை காணவும், இரக்கம் கொள்ளவும், உதவி கரம் நீட்டவும் ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

*கிறிஸ்து ஆண்டவரே, எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.*

மௌனமாக துன்பப்படுவோருக்காக மன்றாடுவோம், தங்கள் துன்பங்களை இயேசுவின் சிலுவையோடு ஒன்றித்து, இதன் வழி நம்பிக்கை, ஆறுதல் மற்றும் பலம் தரும் மகிழ்ச்சியையும் அமைதியையும் அனுபவிக்க ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

*கிறிஸ்து ஆண்டவரே, எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.*

இங்கே கூடியிருக்கும் நமக்காக மன்றாடுவோம், நாம் இயேசுவோடு ஆழ்ந்த உறவைக் கொண்டிருக்கவும், கிறிஸ்துவின் அன்பை தைரியத்துடனும் உண்மையுடனும் பகிர்ந்துக்கொள்ள தாகம் கொண்டவராய் இருக்க ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

*கிறிஸ்து ஆண்டவரே, எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.*

# ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு

நாம் வெளிப்படுத்திய செபங்கள் மற்றும் நமது உள்ளத்தின் ஆழத்தில் உள்ள செபங்கள், மேலும் எல்லா மக்களின் செபங்களையும் ஒன்றிணைத்து, முழு சரணனுடன் இயேசு நமக்கு கற்பித்த இந்த அழகான செபத்தை நாம் ஒன்றிணைந்து மன்றாடுவோமாக....

***ஒன்றாக:***

விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப் பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல, மண்ணுலகிலும் நிறைவேறுக!

எங்கள் அன்றாட உணவை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல, எங்கள் குற்றங்களையும் மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும். தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.

† *தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே, ஆமென்* †

# ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு

நன்றி உமக்கே நன்றி உமக்கே
தேவனே நன்றி உமக்கே
மகிமை உமக்கே மகிமை உமக்கே
என்றும் மகிமை உமக்கே – ராஜா
உமது செயல்களெல்லாம் மகத்தானதே
என்றும் மகத்தானதே
உமது வழிகளெல்லாம் அதிசயமானதே –2
உம்மை எண்ணி எண்ணி என்றும் இன்பம் காண்பேன் 2

# பெரிய வியாழன்

DIOCESE OF PENANG

## ஆண்டவரின் இராவுணவு




"ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன்."

யோவான் 13:34

# பெரிய வியாழன்

† *தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே, ஆமென்* †

*__எல்லாரும் ஒன்றாக:__*

**ஆண்டவரே, உம் பெயரால் நன்றி செலுத்த கூடியிருக்கும் நாங்கள், நற்கருணையை நிறுவிய இந்த சிறப்பான நாளை நாங்கள் நினைவு கூறுகின்றோம். இந்த நாளில் நாங்கள் உம்மை நற்கருணையில் பெற இயலாவிட்டாலும், இந்த வேளையில் நாங்கள் உம்மோடு செபத்தில் ஒன்றிணைந்து இருக்கவும், நீர் தூய ஆவியோடு எங்களோடு தங்கி இருக்கமாறு உம்மை தாழ்மையுடன் மன்றாடுகிறோம்.**

# பெரிய வியாழன்

DIOCESE OF PENANG

## *திருத்தூதர் தூய பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 11: 23-26*

ஆண்டவரிடமிருந்து நான் எதைப் பெற்றுக்கொண்டேனோ அதையே உங்களிடம் ஒப்படைக்கிறேன். அதாவது, ஆண்டவராகிய இயேசு காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இரவில், அப்பத்தை எடுத்து, கடவுளுக்கு நன்றி செலுத்தி, அதைப்பிட்டு, இது உங்களுக்கான என் உடல். இதை என் நினைவாக செய்யுங்கள் என்றார். அப்படியே உணவு அருந்தியபின் கிண்ணத்தையும் எடுத்து, இந்தக் கிண்ணம் என் இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை. நீங்கள் இதிலிருந்து பருகும் போதெல்லாம் என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள் என்றார். ஆதலால் நீங்கள் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்திலிருந்து பருகும் போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அவர் வரும்வரை அறிவிக்கிறீர்கள்.

**ஆண்டவரின் அருள்வாக்கு.** ***பதில்: இறைவனுக்கு நன்றி***

# பெரிய வியாழன்

DIOCESE OF PENANG

**பதிலுரை: அன்பும் நட்பும் எங்குள்ளதோ அங்கே இறைவன் இருக்கின்றார்**

1. கிறிஸ்துவின் அன்பு
நம்மை எல்லாம் ஒன்றாய்
கூட்டி சேர்த்ததுவே
அவரில்
அக்களித்திடுவோம் யாம்
அவரில் மகிழ்சி
கொள்வோமே
ஜீவிய தேவனுக்கு
அஞ்சிடுவோம்
அவருக்கன்பு
செய்திடுவோம்
நேரிய உள்ளத்துடனே
யாம் ஒருவரை ஒருவர்
நேசிப்போம்

2. எனவே ஒன்றாய்
நாமெல்லாம் வந்து கூடும்
போதினிலே
மனதில் வேற்றுமை
கொள்ளாமல் விழிப்பாய்
இருந்து கொள்வோமே
தீய சச்சரவுகள் ஒளிந்திடுக
பிணக்குகள் எல்லாம்
போய் ஒழிக
நமது மத்தியில் நம்
இறைவன்கிறிஸ்து நாதர்
இருந்திடுக

3. முக்தி அடைந்தோர்
கூட்டத்தில் நாமும்
ஒன்றாய் சேர்ந்து மனம்
மகிழ்ந்து கிறிஸ்து
இறைவா நின் மகிமை
வதனம் காண்போமே
முடிவில்லாமல்
என்றென்றும் நித்திய
காலம் அனைத்திற்கும்
அளவில்லாக மாண்புடைய
பேரானந்தம் இதுவே யாம்

# பெரிய வியாழன்

DIOCESE OF PENANG

**நன்றி உள்ளத்துடன், நாம் பெற்றுக்கொண்ட அனேக ஆசீர்வாதங்களுக்காக, ஒவ்வொருவராக இறைவனுக்கு நன்றி கூறுவோம்**

நாங்கள் பாவிகளானபோதும் எங்கள் மீது அன்பு காட்டியதற்காக … **இயேசுவே உம்மை நேசிக்கிறோம்**

விலைமதிப்பற்ற நம்பிக்கையின் கொடைக்காக …. **ஆண்டவரே உம்மை போற்றி நன்றி கூறுகிறோம்**

சவால்களின் வழி எங்களை உம்மோடு நெருங்க செய்ததற்காக… நன்றி ஆண்டவரே

எங்கள் வாழ்கையில் குடும்பம் மற்றும் மக்களின் கொடைக்காக… **ஆண்டவரை போற்றி நன்றி கூறுகிறோம்**

இந்த வேளையில் உமது தூய பிரசன்னத்திற்காக … **இயேசு ஆண்டவரே உம்மை மாட்சிப்படுத்துகிறோம்**

எதிர்காலம் உம் கையிலுள்ளது அதை எங்களால் இப்போ காண முடியாது…தந்தையே உம்மை நம்புகிறோம்

ஆவியின் கொடைக்காகவும் எங்களில் தொடர்ந்து செயல்படுவதற்காகவும்….. ஆண்டவரே உமக்கு புகழ்

# பெரிய வியாழன்

DIOCESE OF PENANG

**இறைவனையும் பிறரையும் புண்படுத்தியதற்காக, இவ்வேளையில் மனம்வருந்தி தந்தையிடம் திரும்புவோம்**

சோதனை, சிரமம், சந்தேக வேளையில் உமமை முழுமையாக நம்பாததற்காக.. மன்னியும், ஆண்டவரே

உம்மை ஒரு பொருட்டாக கருதியதற்காகவும், செப வாழ்வை புறக்கணித்தற்காகவும்.. மன்னியும், ஆண்டவரே

பெற்ற அன்றாட ஆசீர்களுக்காக நன்றி கூறாமைக்காக … மன்னியும், ஆண்டவரே

***உமது சித்தத்தை கண்டறியாமல், எங்கள் விருப்பத்தை நாடியதற்காக … மன்னியும், ஆண்டவரே***

ஒருவர் மற்றவருடைய குற்றங்களை மன்னிக்க தவறியதற்காக … மன்னியும் ஆண்டவரே

மற்றவருக்கு மகிழ்ச்சி அளிக்க முயற்சி எடுக்காததற்காக… மன்னியும் ஆண்டவரே

மற்றவர்களில் நன்மையை காணாமல் மாறாக எதிர்மறையை நோக்கியதால் …. மன்னியும் ஆண்டவரே

இதற்காகவும் எல்லா நேரங்களிலும் உம்மையும் பிறரையும் புண்படுத்தியதற்காக…. மன்னியும் ஆண்டவரே

# பெரிய வியாழன்

ஆண்டவரே, இன்று உலகெங்கும் உள்ள குருவானவர்களை நினைவுக்கூர்ந்து அவர்களுக்காக மன்றாடுகிறோம்



- ஓ அன்பான இயேசுவே,
- பிரமாணிக்கமும் ஊக்கமும் கொண்ட உமது குருவானவர்கள்,
- பிரமாணிக்கமற்ற மற்றும் ஆர்வமற்ற குருக்கள்
- உள்நாட்டிலோ அல்ல வெளிநாட்டில் பணிபுரியும் உமது குருவானவர்கள்
- சோதனையில் போராடும் உமது குருவானவர்கள்
- தனிமையில் இருக்கும் உமது குருவானவர்கள்
- நோய்வாய் கொண்டிருக்கும் உமது குருவானவர்கள்
- இறக்கும் தருவாயில் இருக்கும் உமது குருவானவர்கள்
- அன்மையில் கோவிட்-19தால் இறந்த உமது குருவானவர்கள்
- உத்திரிக்க ஸ்தலத்தில் இருக்கும் உமது குருவானவர்களின் ஆத்துமாக்கள்

# பெரிய வியாழன்

DIOCESE OF PENANG

**ஆண்டவரே, இன்று உலகெங்கும் உள்ள குருவானவர்களை நினைவுக்கூர்ந்து அவர்களுக்காக மன்றாடுகிறோம**



- எங்களுக்கு திருமுழுக்கு கொடுத்த குருவானவர்களை நினைவுக்கூறுகின்றோம்.
- எங்களுக்கு பாவ மன்னிப்பு கொடுத்த குருவானவர்
- எங்களுக்கு திருத்தைலம் பூசி செபித்த குருவானவர்
- நாங்கள் உமது உடலையும் இரத்தத்தையும் நற்கருணையில் பெற்றுக்கொள்ள திருப்பலி கொண்டாடிய குருவானவர்கள்
- எங்களுக்கு கற்பித்து ஆலோசனை தந்த குருவானவர்கள்
- நாங்கள் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கும் எல்லா குருவானவர்கள்
- எங்கள் வார்த்தைகள், எங்கள் எண்ணங்கள், எங்கள் செயல்கள் மூலம் எங்கள் குருவானவர்களை புண்படுத்தியிருந்தால் மன்னிப்பு கேட்கின்றோம்.

# பெரிய வியாழன்

DIOCESE OF PENANG

**ஆண்டவரே, இன்று உலகெங்கும் உள்ள குருவானவர்களை நினைவுக்கூர்ந்து அவர்களுக்காக மன்றாடுகிறோம**



அன்னை மரியாளே, இயேசுவின் தாயே, அவர்களை உமது உள்ளத்தில் வைத்து, பாதுகாத்து வழிநடத்தவும். அவர்கள் ஊக்கம் இல்லாமல் தனிமையாக இருக்கும் வேளையில் அவர்களுக்கு ஒரு தாயாக இருக்கவும்.

அன்புள்ள மரியாளே, இறைவனின் தாயே, எல்லா குருவானவர்களையும் உம்மைப் போல் தாழ்மை உள்ளவர்களாகவும், இயேசுவைப் போல் தூயவர்களாக ஆக்கவும்.

குருத்துவ தேவ அழைத்தலுக்காக இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம், அவர்களுக்காக ஒவ்வொரு நாளும் உமது பரிந்துரை வழி செபிக்க உறுதியளிக்கின்றோம். ஆமென்.

# பெரிய வியாழன்

## குடும்பத்தினரோடும் வீட்டில் உள்ளவர்களோடும் பாஸ்கா இராவுணவு

பாஸ்கா என்பது ஒரு மிகப்பெரிய மகிழ்ச்சியின் கொண்டாட்டம், இதில் இறைவன் எவ்வாறு, **"நம்மை அடிமைத்தனத்திலிருந்து விடுதலைக்கும், சோகத்திலிருந்து மகிழ்ச்சிக்கும், துக்கத்திலிருந்து விருந்து கொண்டாட்டத்திற்கும், அடிமைத்தனத்திலிருந்து மீட்பிற்கும், இருளிலிருந்து அற்புதமான வெளிச்சத்திற்கும்"** அழைத்துச்சென்றார் என்பதை விளக்குகிறது.

***(எசேக்கியல் 12: 1-8. 11-14)***

எல்லோரும் சேர்ந்து, ஒரு எளிய மகிழ்ச்சியான நன்றி உணவை உண்பதற்கு நடுவில் ஒரு எரியும் மெழுகுவாடதடதியைக் வைக்கவும், புனிதத்தன்மையின் வாழ்க்கைக்கு இறைவனுக்கு நன்றி கூறுவோம்.


**இந்த உணவின் போது நீங்கள் எவ்வாறு இந்த கோவிட்-19ல் கிறிஸ்துவை சந்தித்திற்கள் என்ற அனுபவத்தை பகிர்ந்துக் கொள்ளவும்.**

# பெரிய வியாழன்

இயேசு ஆண்டவரே,

உம் ஆவியோடு இணைந்து, உமக்காகவும் உம்மோடும் இந்த நேரத்தை அர்ப்பணிக்க நாங்கள் தேர்வு செய்கிறோம்

இறைவனோடு தனிப்பட்ட மற்றும் அமைதியாக ஒரு மணி நேரம்



ஆண்டவரே, இரக்கமாயிரும் - ஆண்டவரே, இரக்கமாயிரும்
கிறிஸ்துவே, இரக்கமாயிரும் - கிறிஸ்துவே, இரக்கமாயிரும்
ஆண்டவரே, இரக்கமாயிரும் - ஆண்டவரே, இரக்கமாயிரும்

புனித மரியாயே, இறைவனின் தாயே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித மிக்கேலே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
இறைவனின் புனித தூதர்களே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.
புனித ஸ்நாபக அருளப்பரே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித சூசையப்பரே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித இராயப்பரே, புனித சின்னப்பரே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.
புனித பெலவேந்திரரே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித அருளப்பரே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித யாகப்பரே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித மதலேன் மரியம்மாளே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித ஸ்தேபானே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித அந்தியோக்கு இஞ்ஞாசியாரே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித லவுரேஞ்சியாரே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித லாரன்சே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித பெர்பேத்துவா பெரிசித்தம்மாளே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித அஞ்ஞேசம்மாளே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித கிரகோரியாரே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித அகுஸ்தீனாரே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித அத்தனாசியாரே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித பசிலியாரே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித மார்த்தீனாரே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித ஆசீர்வாதப்பரே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித லொயோலா இஞ்ஞாசியாரே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்
புனித பிரான்சிஸ்குவே, சுவாமிநாதரே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித பிரான்சிஸ்கு சவேரியாரே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித வியான்னி மரிய அருளப்பரே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித சியன்னா கத்தரீனம்மாளே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித அவிலா தொரேசம்மாளே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித அருளானந்தரே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித செபஸ்தியாரே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித பதுவை அந்தோனியாரே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித அல்போன்சம்மாவே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித தந்தை பியோவே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித அன்னை தெரசாவே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
இறைவனின் எல்லாப் புனிதர்களே, புனிதையர்களே
- எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.
கருணைகூர்ந்து - எங்களை மீட்டருளும் ஆண்டவரே
தீமை அனைத்திலுமிருந்து - எங்களை மீட்டருளும் ஆண்டவரே
பாவம் அனைத்திலிமிருந்து - எங்களை மீட்டருளும் ஆண்டவரே
நித்திய மரணத்திலிருந்து - எங்களை மீட்டருளும் ஆண்டவரே
உமது மனித அவதாரத்தினாலே - எங்களை மீட்டருளும் ஆண்டவரே
உமது மரணத்தினாலே, உயிர்ப்பினாலே - எங்களை மீட்டருளும் ஆண்டவரே
தூய ஆவியின் வருகையினாலே - எங்களை மீட்டருளும் ஆண்டவரே
பாவிகளாகிய நாங்கள் உம்மை மன்றாடுகிறோம்
- எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.
(திருமுழுக்குப் பெறவேண்டியவர் இருந்தால்)
தேர்ந்துகொள்ளப் பெற்ற இம்மக்கள் திருமுழுக்கின் அருளினால்
புத்துயிர்பெறச் செய்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்
- எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.
(திருமுழுக்குப் பெறவேண்டியவர் இல்லையென்றால்:)
உமக்குப் பிள்ளைகளாக மக்கள் மறுபிறப்பு அடையுமாறு,
இந்த நீருற்றை உமது அருளினால்
புனிதமாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்
- எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.
உயிருள்ள கடவுளின் திருமகனாகிய இயேசுவே,
உம்மை மன்றாடுகிறோம் - எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.
கிறிஸ்துவே எங்களுக்கு செவிசாய்தரும்
- கிறிஸ்துவே எங்களுக்கு செவிசாய்தரும்.
கிறிஸ்துவே தயவாய் செவிசாய்தரும்
- கிறிஸ்துவே தயவாய் செவிசாய்தரும்



# ஆண்டவருடைய பாடுகளின் வெள்ளி



# ஆண்டவருடைய பாடுகளின் வெள்ளி

DIOCESE OF PENANG

## நோன்பு - உபவாசம

***எல்லோரும் ஒன்றாக:***

**அன்புள்ள இயேசு ஆண்டவரே, நீர் கல்வாரி செல்லும் பாதையில் நாங்களும் இன்று உம்முடன் நடப்பதன் மூலம் உமது பாடுகள் மற்றும் மரணத்தையும் தியானிக்கின்றோம், எங்கள் மீது நீர் கொண்ட அளவு கடந்த அன்பின் காரணமாக நீர் சொல்லொன்னா வேதனைப்பட்டு எங்கள் பாவங்களுக்காகவும், என் பாவங்களுக்காக சிலுவையின் மீது மரித்ததையும் நாங்கள் தியானிக்கின்றோம்.**

**இரக்கமே இறைவனையும் மனிதனையும் இணைக்கும் பாலம்**
~ Misericordiae Vultus (MV2) ~

# ஆண்டவருடைய பாடுகளின் வெள்ளி

பாடுகள் நீர் பட்ட போது
பாய்ந்து ஓடிய இரத்தம்
கோடி பாவம் தீர்த்து மோட்சம்
கொள்ளுவிக்க வல்லதே

1. கெட்டுப் போனோம் பாவியானோம்
கிருபை செய் நாதனே
மட்டிலாக் கருணை என் மேல்
வைத்திரங்கும் இயேசுவே

# ஆண்டவருடைய பாடுகளின் வெள்ளி

பாடுகள் நீர் பட்ட போது
பாய்ந்து ஓடிய இரத்தம்
கோடி பாவம் தீர்த்து மோட்சம்
கொள்ளுவிக்க வல்லதே

2. துட்ட யூதர் தூணினோடு
தூய கைகள் கட்டியே
கஷ்டமாய் அடித்த போது
காய்ந்த செந்நீர் எத்துணை

# ஆண்டவருடைய பாடுகளின் வெள்ளி

† *தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே, ஆமென்* †

*<u>எல்லோரும் ஒன்றாக</u>*

**இறைவா, தீமையின் அதிகாரத்திலிருந்து எங்களை விடுவிப்பதற்காக சிலுவையின் அவமானத்தை எங்களுக்காக உம் மகனை அனுபவிக்க நீ திருவுளமானீர். எங்கள் உள்ளத்தை கிறிஸ்துவின் அன்பிற்காக நிரப்பவும், பாவத்திற்காக துக்கப்படவும் மேலும், அவருடைய உயிர்த்தெழுதலின் அருளை நாங்கள் பெற்றுக்கொள்ள அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.**

# ஆண்டவருடைய பாடுகளின் வெள்ளி

DIOCESE OF PENANG

## *தொடக்க மன்றாட்டு*

எங்கள் ஆண்டவரே எங்கள் மீட்பரே, உமது வாழ்க்கையினாலும், உமது மரணத்தினாலும் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை எங்களுக்கு வெளிப்படுத்தினீரே. உமது வாழ்க்கையை எங்கள் வாழ்க்கையோடு ஒப்பிடும்போது, நாங்கள் எங்களைப்பற்றி கேள்விகள் கேட்க தொடங்குகிறோம். ஆண்டவரே, சில நேரங்களில், வாழ்க்கையின் கடல் மிகவும் அகலமாகவும் ஆழமாகவும் தெரிகிறது, எங்கள் கப்பலின் துடுப்போ மிகவும் சிறியதாக இருக்கிறது. நாங்கள் எங்களையும் உம்மையும் புரிந்து வளர உதவியருளும். எங்கள் வாழ்க்கையையும் அதனுடன் வரும் அனைத்தையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள எங்களுக்கு உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

# முதலாம் நிலை :
# இயேசு சாவுக்கு தீர்ப்பிடப் படுகின்றார்



முதல்வர்:

திவ்விய இயேசுவே! உம்மை
ஆராதித்து வணங்கி உமக்கு
நன்றியறிந்த ஸ்தோத்திரம்
செய்கிறோம்.

தலை வணங்குவோம்

அனைவரும்:

அதேனென்றால்
உமது பாரமான
திருச்சிலுவையாலே உலகத்தை
மீட்டு இரட்சித்தீர்.

# முதலாம் நிலை :
# இயேசு சாவுக்கு தீர்ப்பிடப் படுகின்றார்



பொழுது விடிந்ததும் தலைமைக் குருக்கள், மக்களின் மூப்பர்கள் யாவரும் இயேசுவைக் கொல்ல அவருக்கு எதிராக ஆலோசனை செய்தனர். அவரைக் கட்டி இழுத்துச் சென்று ஆளுநர் பிலாத்திடம் ஒப்புவித்தனர். பிலாத்து அவர்களிடம், “அப்படியானால் மெசியா என்னும் இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்டான். அனைவரும், “சிலுவையில் அறையும்” என்று பதிலளித்தனர். அதற்கு அவன், “இவன் செய்த குற்றம் என்ன?” என்று கேட்டான். அவர்களோ, “சிலுவையில் அறையும்” என்று இன்னும் உரக்கக் கத்தினார்கள்.


# முதலாம் நிலை :
# இயேசு சாவுக்கு தீர்ப்பிடப் படுகின்றார்

DIOCESE OF PENANG

செபம்: (எல்லோரும்)
எங்கள் அன்பு இயேசுவே! யாதொரு குற்றமோ பாவமோ அறியாத உம்மைச் சாவுக்குத் தீர்ப்பிட்டார்கள். வாழ்வும், வழியும், உண்மையுமான உம்மையே நாங்கள் பின்பற்றவும், தவறான தீர்ப்பு வழங்காதிருக்கவும் எங்களுக்கு அருள்தாரும். ஆமென்!

# முதலாம் நிலை :
# இயேசு சாவுக்கு தீர்ப்பிடப் படுகின்றார்

பழிகளை சுமத்தியே
பரிகாசம் செய்தனரே
மரணத் தீர்ப்பிட்டே



# இரண்டாம் நிலை :
# இயேசு தன் சிலுவையை ஏற்றுக் கொள்கிறார



முதல்வர்:
திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

தலை வணங்குவோம்

அனைவரும்:
அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையாலே உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

# இரண்டாம் நிலை :
# இயேசு தன் சிலுவையை ஏற்றுக் கொள்கிறார




ஆளுநரின் படைவீரர் இயேசுவை ஆளுநர் மாளிகைக்குக் கூட்டிச் சென்று அங்கிருந்த படைப்பிரிவினர் அனைவரையும் அவர்முன் ஒன்று கூட்டினர் அவருடைய ஆடைகளை உரிந்து, கருஞ்சிவப்பு நிறமுள்ள தளர் அங்கியை அவருக்கு அணிவித்தனர். அவர்கள் ஒரு முள்முடி பின்னி அவரது தலையின்மேல் வைத்து, அவருடைய வலக்கையில் ஒரு கோலைக் கொடுத்து அவர்முன் முழந்தாள்படியிட்டு, "யூதரின் அரசரே, வாழ்க!" என்று சொல்லி ஏளனம் செய்தனர் அவர்மேல் துப்பி, அக்கோலை எடுத்து அவருடைய தலையில் அடித்தனர் அவரை ஏளனம் செய்தபின், அவர்மேல் இருந்த தளர் அங்கியைக் கழற்றிவிட்டு அவருடைய ஆடைகளை அணிவித்து அவரைச் சிலுவையில் அறைவதற்காக இழுத்துச் சென்றனர்.

# THE SECOND STATION
## Jesus carries the cross

செபம்: (எல்லோரும்)
அன்பு இயேசுவே! உம்மேல் சுமத்தப்பட்ட சிலுவை எங்கள் பாவங்களின் விளைவு என்பதை உணர்கின்றோம். யார்மீதும் அநியாயமாகப் பழிசுமத்தாமல் இருக்கவும், எங்கள் வாழ்வில் வருகின்ற துன்பங்கள் என்னும் சிலுவையைப் பொறுமையோடு ஏற்றுக்கொள்ளவும் எங்களுக்கு அருள்தாரும். ஆமென்!

# இரண்டாம் நிலை :
# இயேசு தன் சிலுவையை ஏற்றுக் கொள்கிறாா

**தாளாச் சிலுவை சுமந்து**
**சொல் லொன்னா வேதனைப்பட்டு**
**துடிக்க செய்தனரே**



# மூன்றாம் நிலை
# இயேசு முதல் முறை கீழே விழுகிறாா



முதல்வர்:
திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

தலை வணங்குவோம்

அனைவரும்:
அதேனென்றால்
உமது பாரமான
திருச்சிலுவையாலே உலகத்தை
மீட்டு இரட்சித்தீர்.

# மூன்றாம் நிலை
# இயேசு முதல் முறை கீழே விழுகிறாா




என் குற்றங்கள் என்னும் நுகம் அவர் கையால் பூட்டப்பட்டுள்ளது அவை பிணைக்கப்பட்டு, என் கழுத்தைச் சுற்றிக் கொண்டன அவர் என் வலிமையைக் குன்றச் செய்தார் நான் எழ இயலாதவாறு என் தலைவர் என்னை அவர்கள் கையில் ஒப்புவித்தார். இவற்றின் பொருட்டு நான் புலம்புகின்றேன் என் இரு கண்களும் கண்ணீரைப் பொழிகின்றன என் உயிரைக் காத்து ஆறுதல் அளிப்பவர் எனக்கு வெகு தொலையில் உள்ளார் பகைவன் வெற்றி கொண்டதால் என் பிள்ளைகள் பாழாய்ப் போயினர். சீயோன் தன் கைகளை உயர்த்துகின்றாள் அவளைத் தேற்றுவார் யாருமில்லை சூழ்ந்து வாழ்வோர் யாக்கோபுக்கு எதிரிகளாயிருக்குமாறு ஆண்டவர் கட்டளையிட்டார் எருசலேம் அவர்களிடையே தீட்டுப்பொருள் ஆயிற்று.

# மூன்றாம் நிலை
# இயேசு முதல் முறை கீழே விழுகிறார்

(எல்லோரும்)
அன்பு இயேசுவே! சிலுவையின் பாரத்தால் நீர் முகம் குப்புறக் கீழே விழுந்தீர். துன்ப துயரங்களின் சுமையால் வாடுகின்ற மக்களைக் கனிவோடு கண்ணோக்கிட எங்களுக்கு அருள்வீராக. ஆமென்

# மூன்றாம் நிலை
# இயேசு முதல் முறை கீழே விழுகிறாா

**பாராச் சிலுவையின் கீழே**
**விழுந்தீர் என் ஆண்டவரே**
**பாவிக்காய் எழுந்தீரே**



# நான்காம் நிலை
# இயேசு தன் தாயைச் சந்திக்கிறாா



முதல்வர்:
திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

தலை வணங்குவோம்

அனைவரும்:
அதேனென்றால்
உமது பாரமான திருச்சிலுவையாலே உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

# நான்காம் நிலை
# இயேசு தன் தாயைச் சந்திக்கிறாா




மகளே! எருசலேம்! உன் சார்பாக நான் என்ன சொல்வேன்? உன்னை எதற்கு ஒப்பிடுவேன்? மகள் சீயோனே! கன்னிப் பெண்ணே! யாருக்கு உன்னை இணையாக்கித் தேற்றுவேன் ? உன் காயம் கடலைப்போல் விரிந்துள்ளதே! உன்னைக் குணமாக்க யாரால் முடியும்? அவ்வழியாய்க் கடந்து செல்வோர் உன்னைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்தனர்! மகள் எருசலேமை நோக்கித் தலையை ஆட்டிச் சீழ்க்கையடித்தனர்! “அழகின் நிறைவும் மண்ணுலகின் மகிழ்ச்சியுமாக இருந்த மாநகர் இதுதானா?” என்றனர். அவர்களின் இதயம் என் தலைவனை நோக்கிக் கூக்குரலிடுகின்றது மகள் சீயோனின் மதிலே! இரவும் பகலும் வெள்ளமெனக் கண்ணீர் பொழி! உனக்கு ஒய்வு வேண்டாம்! கண்ணீர் விடாமல் நீ இருக்க வேண்டாம்!

# நான்காம் நிலை
# இயேசு தன் தாயைச் சந்திக்கிறாா

(எல்லோரும்)
அன்பு இயேசுவே! உம்மை ஈன்றெடுத்த அன்னை மரியா உம் துன்பங்களைக் கண்டு மனமுடைந்தார். அந்த அன்னையின் அரவணைப்பில் நாங்கள் என்றும் மகிழ்வுகொள்ள அருள்வீராக. ஆமென்!

# நான்காம் நிலை
# இயேசு தன் தாயைச் சந்திக்கிறாா

**தாங்கா வொன்னாத் துயருற்றாள்**
**நின் வதனம் கண்ட தாயார்**
**மனம் நொந்தழுதாள்**



# ஐந்தாம் நிலை
# சிலுவையை சுமக்க இயேசுவுக்கு சீமோன் உதவுகிறார்



முதல்வர்:
திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

தலை வணங்குவோம்

அனைவரும்:
அதேனென்றால்
உமது பாரமான திருச்சிலுவையாலே உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

# ஐந்தாம் நிலை
# சிலுவையை சுமக்க இயேசுவுக்கு சீமோன் உதவுகிறார்




அவர்கள் இயேசுவை இழுத்துச் சென்று கொண்டிருந்தபோது சீரேன் ஊரைச்சேர்ந்த சீமோன் என்பவர் வயல்வெளியிலிருந்து வந்துகொண்டிருந்தார். அவர்கள் அவரைப் பிடித்து அவர்மேல் இயேசுவின் சிலுவையை வைத்து, அவருக்குப்பின் அதைச் சுமந்து கொண்டுபோகச் செய்தார்கள். (மத்தேயு 16:24) பின்பு இயேசு தம் சீடரைப் பார்த்து, “என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்” என்றார். (மத்தேயு 11:29-30)

# ஐந்தாம் நிலை
# சிலுவையை சுமக்க இயேசுவுக்கு சீமோன் உதவுகிறாா

(எல்லோரும்)
அன்பு இயேசுவே! கடின சிலுவையை நீர் சுமந்துசெல்ல சீமோன் என்பவர் துணைசெய்தார். எங்கள் சகோதரர் சகோதரிகளின் துன்பங்களைப் பகிர்ந்துகொண்டு, அவர்களின் சிலுவைப் பாரத்தைக் குறைத்திட எங்களுக்குத் துணைசெய்வீராக. ஆமென்!

# ஐந்தாம் நிலை
# சிலுவையை சுமக்க இயேசுவுக்கு சீமோன் உதவுகிறார்

கட்டாயப் படுத்திய தால்
சீமோன் தன்னை வருந்தினார்
தம்மை உம்மோடு



# ஆறாம் நிலை
# வெரோணிக்கா இயேசுவின் முகத்தை துடைக்கிறாா



முதல்வர்:
திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

தலை வணங்குவோம்

அனைவரும்:
அதேனென்றால்
உமது பாரமான
திருச்சிலுவையாலே உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

# ஆறாம் நிலை
# வெரோணிக்கா இயேசுவின் முகத்தை துடைக்கிறார



அதற்கு நேர்மையாளர்கள் “ஆண்டவரே, எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உணவளித்தோம், அல்லது தாகமுள்ளவராகக் கண்டு உமது தாகத்தைத் தணித்தோம்? எப்பொழுது உம்மை அன்னியராகக் கண்டு ஏற்றுக் கொண்டோம்? அல்லது ஆடை இல்லாதவராகக் கண்டு ஆடை அணிவித்தோம்? எப்பொழுது நோயுற்றவராக அல்லது சிறையில் இருக்கக் கண்டு உம்மைத்தேடி வந்தோம்?” என்று கேட்பார்கள். அதற்கு அரசர், “மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்” எனப் பதிலளிப்பார்.


# ஆறாம் நிலை
# வெரோனிக்கா இயேசுவின் முகத்தை துடைக்கிறாா

DIOCESE OF PENANG

(எல்லோரும்)
அன்பு இயேசுவே! வியர்வையாலும் இரத்தத்தாலும் கறைபட்ட உம் திருமுகத்தை ஒரு பெண்மணி அன்போடு துடைத்து உமக்கு ஆறுதலளித்தார். எங்கள் வீட்டிலும் நாட்டிலும் உலகிலும் கவலையால் வாடும் அனைவரின் துன்பங்களையும் துடைத்திட எங்களுக்கு அருள்வீராக. ஆமென்!

# ஆறாம் நிலை
# வெரோணிக்கா இயேசுவின் முகத்தை துடைக்கிறாா

**மாதுவின் சிறுதுனியில்**
**பதிந்தது உம் வதனம்**
**அன்பின் விலைவாக**



# ஏழாம் நிலை
# இயேசு இரண்டாம் முறை விழுகிறாா



முதல்வா்:
திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

தலை வணங்குவோம்

அனைவரும்:
அதேனென்றால்
உமது பாரமான
திருச்சிலுவையாலே உலகத்தை
மீட்டு இரட்சித்தீா்.

# ஏழாம் நிலை
# இயேசு இரண்டாம் முறை விழுகிறாா




அவர் இகழப்பட்டார் மனிதரால் புறக்கணிக்கப்பட்டார் வேதனையுற்ற மனிதராய் இருந்தார் நோயுற்று நலிந்தார் காண்போர் தம் முகத்தை மூடிக்கொள்ளும் நிலையில் அவர் இருந்தார் அவர் இழிவுபடுத்தப்பட்டார் அவரை நாம் மதிக்கவில்லை. மெய்யாகவே அவர் நம் பிணிகளைத் தாங்கிக்கொண்டார் நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார் நாமோ அவர் கடவுளால் வதைக்கப்பட்டு நொறுக்கப்பட்டவர் என்றும் சிறுமைப்படுத்தப்பட்டவர் என்றும் எண்ணினோம். அவரோ நம் குற்றங்களுக்காகக் காயமடைந்தார் நம்தீச்செயல்களுக்காக நொறுக்கப்பட்டார் நமக்கு நிறைவாழ்வை அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார் அவர்தம் காயங்களால் நாம் குணமடைகின்றோம்.

# ஏழாம் நிலை
# இயேசு இரண்டாம் முறை விழுகிறார்

(எல்லோரும்)
அன்பு இயேசுவே! சிலுவையின் பாரம் உம் தோள்களை அழுத்தியதால் நீர் மீண்டும் ஒருமுறை கீழே விழுந்தீர். ஆனால் மன உறுதியோடு மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தீர். நாங்களும் ஏமாற்றத்தையும் தோல்வியையும் கண்டு துவழ்ந்துவிடாமல் துணிந்து எழுந்து, உம்மேல் நம்பிக்கைவைத்து முன்னேறிச் சென்றிட அருள்வீராக. ஆமென்!

# ஏழாம் நிலை
# இயேசு இரண்டாம் முறை விழுகிறாா

**சிலுவை சுமந்ததினால்**
**ஓய்ந்து நிலத்தில் சாய்ந்தீரே**
**மறு முறையுமாய்**



# எட்டாம் நிலை
# இயேசுவைக் கண்டு பெண்கள் அழுகிறார்கள



முதல்வர்:
திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

தலை வணங்குவோம்

அனைவரும்:
அதேனென்றால்
உமது பாரமான திருச்சிலுவையாலே உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

# எட்டாம் நிலை
# இயேசுவைக் கண்டு பெண்கள் அழுகிறார்கள



பெருந்திரளான மக்களும் அவருக்காக மாரடித்துப் புலம்பி ஒப்பாரி வைத்த பெண்களும் அவர் பின்னே சென்றார்கள். இயேசு அப்பெண்கள் பக்கம் திரும்பி, "எருசலேம் மகளிரே, நீங்கள் எனக்காக அழவேண்டாம் மாறாக உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள்" என்றார். (திருத்தூதர் பணிகள் 21:13) அதற்குப் பவுல் மறுமொழியாக, "நீங்கள் அழுது ஏன் என் உள்ளத்தை உடைக்கிறீர்கள்? நான் ஆண்டவர் இயேசுவின் பெயருக்காக எருசலேமில் கட்டப்படுவதற்கு மட்டுமல்ல, சாவதற்கும் தயார்" என்றார்.

# எட்டாம் நிலை
# இயேசுவைக் கண்டு பெண்கள் அழுகிறார்கள

DIOCESE OF PENANG

(எல்லோரும்)

அன்பு இயேசுவே! உமக்கு நேர்ந்த சொல்லற்கரிய துன்பத்தையும் பாராமல் நீர் பிறருக்கு ஆறுதல் கூறுகிறீர். தன்னலம் பாராது பிறர்நலம் நோக்கவும், துன்புறுவோருக்கு ஆறுதல் கூறவும் எங்களுக்கு நல்மனத்தைத் தந்து, தூய வழியில் நாங்கள் நடந்திட அருள்வீராக. ஆமென்!


# எட்டாம் நிலை
# இயேசுவைக் கண்டு பெண்கள் அழுகிறார்கள

DIOCESE OF PENANG

அழுத மகளிருக்காய்


ஆறுதல் மொழி நல்கியே

வழி தொடர்ந்தீரே



# ஒன்பதாம் நிலை
# இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறாா

Est. 1955
DIOCESE OF PENANG
MALAYSIA




முதல்வர்:
திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

தலை வணங்குவோம்

அனைவரும்:
அதேனென்றால்
உமது பாரமான
திருச்சிலுவையாலே உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

# ஒன்பதாம் நிலை
# இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்




இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்? என்னைக் காப்பாற்றாமலும், நான் தேம்பிச் சொல்வதைக் கேளாமலும் ஏன் வெகு தொலையில் இருக்கின்றீர்?... ஆண்டவரே, உமது பேரிரக்கத்தை எனக்குக் காட்ட மறுக்காதேயும் உமது பேரன்பும் உண்மையும் தொடர்ந்து என்னைப் பாதுகாப்பனவாக! ஏனெனில் எண்ணிறந்த தீமைகள் எனைச் சூழ்ந்து கொண்டன என் குற்றங்கள் என்மீது கவிழ்ந்து என் பார்வையை மறைத்துக்கொண்டன. அவை என் தலைமுடிகளைவிட மிகுதியானவை் என் உள்ளம் தளர்ந்து என்னைக் கைவிட்டது. ஆண்டவரே, என்னை விடுவிக்க மனமிசைந்தருளும் ஆண்டவரே, எனக்கு உதவி செய்ய விரைந்து வாரும்.

# ஒன்பதாம் நிலை
# இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்

(எல்லோரும்)
அன்பு இயேசுவே! மீண்டும் மீண்டும் கீழே விழுந்ததால் உம் உடல் எல்லாம் இரத்தமயமாயிற்று. எங்கள் பாவங்களுக்காக நீர் நொறுக்கப்பட்டீர். எங்கள் சிந்தனை, சொல், செயல் அனைத்திலும் நாங்கள் தூய்மையோடு வாழவும், பாவத்தை வெறுத்து, உம் அன்பில் எந்நாளும் வளரவும் எங்களுக்கு அருள்வீராக. ஆமென்!

# ஒன்பதாம் நிலை
# இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறாா

மூன்றாம் முறையாய் வீழ்ந்தீரே
கால் ஊன்றி நடந்திடவே
நிலை தளர்ந்தீரே



# பத்தாம் நிலை
# இயேசுவின் மேலிருந்து ஆடைகள் கிழிக்கப் படுகின்றன



முதல்வர்:
திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

தலை வணங்குவோம்

அனைவரும்:
அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையாலே உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

# பத்தாம் நிலை

# இயேசுவின் மேலிருந்து ஆடைகள் கிழிக்கப் படுகின்றன



இயேசுவைச் சிலுவையில் அறைந்தபின் படைவீரர் அவருடைய மேலுடைகளை நான்கு பாகமாகப் பிரித்து ஆளுக்கு ஒரு பாகம் எடுத்துக் கொண்டார்கள். அங்கியையும் அவர்களே எடுத்துக்கொண்டனர். அந்த அங்கி மேலிருந்து கீழ்வரை தையலே இல்லாமல் நெய்யப்பட்டிருந்தது. எனவே அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி, “அதைக் கிழிக்க வேண்டாம். அது யாருக்கு கிடைக்கும் என்று பார்க்கச் சீட்டுக் குலுக்கிப் போடுவோம்” என்றார்கள். “என் ஆடைகளைத் தங்களுக்குள் பகிர்ந்து என் உடைமீது சீட்டுப் போட்டார்கள்” என்னும் மறைநூல் வாக்கு இவ்வாறு நிறைவேறியது.

# பத்தாம் நிலை

# இயேசுவின் மேலிருந்து ஆடைகள் கிழிக்கப் படுகின்றன

DIOCESE OF PENANG


(எல்லோரும்)

அன்பு இயேசுவே! உம் உடைகளைக் களைந்தவர்கள் உம்மை அவமானத்திற்கு உள்ளாக்கினார்கள். வறுமை, அரசியல் அடக்குமுறை, அதிகாரப்பாணி போன்ற அவலங்களால் மனித உரிமையும் மாண்பும் உரியப்பட்டு நிர்வாணமாக்கப்படுகின்ற எம் சகோதரர் சகோதரியரை நினைத்துப் பார்க்கின்றோம். உம் உடன்பிறப்புகளாகிய அவர்களது மாண்பினைக் காத்துப் போற்றிட எங்களுக்கு அருள்வீராக. ஆமென்!

# பத்தாம் நிலை
# இயேசுவின் மேலிருந்து ஆடைகள் கிழிக்கப் படுகின்றன

DIOCESE OF PENANG

களைந்தனர் உடைகளை
காயங்கள் மீண்டும் புண்பட
மெய்யாகவே நோந்தீரே



# பதினோறாம் நிலை
# இயேசு சிலுவையில் அறையப் படுகிறாா



முதல்வர்:
திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

தலை வணங்குவோம்

அனைவரும்:
அதேனென்றால்
உமது பாரமான
திருச்சிலுவையாலே உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

# பதினோறாம் நிலை
# இயேசு சிலுவையில் அறையப் படுகிறாா



அப்போது பிலாத்து அவரைச் சிலுவையில் அறையுமாறு அவர்களிடம் ஒப்புவித்தான். அவர்கள் இயேசுவைத் தம் பொறுப்பில் ஏற்றுக்கொண்டார்கள். இயேசு சிலுவையைத் தாமே சுமந்துகொண்டு “மண்டை ஓட்டு இடம்” என்னுமிடத்திற்குச் சென்றார். அதற்கு எபிரேய மொழியில் “கொல்கொதா” என்பது பெயர். அங்கே அவர்கள் இயேசுவையும் அவரோடு வேறு இருவரையும் சிலுவைகளில் அறைந்தார்கள் அவ்விருவரையும் இரு பக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாக அறைந்தார்கள். பிலாத்து குற்ற அறிக்கை ஒன்று எழுதி அதைச் சிலுவையின் மீது வைத்தான். அதில் “நாசரேத்து இயேசு யூதர்களின் அரசன்” என்று எழுதியிருந்தது.

# பதினோறாம் நிலை
# இயேசு சிலுவையில் அறையப் படுகிறாா


(எல்லோரும்)
அன்பு இயேசுவே! சிலுவையில் நீர் அறையப்பட்டபோது உம் கைகளையும் கால்களையும் ஆணிகளால் துளைத்தார்கள். உம் திருக்காயங்களால் நீர் எங்கள் காயங்களைக் குணமாக்குகிறீர். நீர் சிந்திய இரத்தத்தால் நாங்கள் கழுவப்பட்டுள்ளோம். அவமானச் சின்னமாகிய சிலுவையை நீர் மீட்பின் கருவியாக்கியதுபோல நாங்களும் எங்கள் துன்பதுயரங்களை உம் சிலுவையோடு இணைத்து உம் மீட்பின் பலன்களை இடைவிடாது துய்த்து அனுபவித்திட எங்களுக்கு அருள்வீராக. ஆமென்!

# பதினோறாம் நிலை
# இயேசு சிலுவையில் அறையப் படுகிறார

**ஆணிகளால் உம் மேனியை**

**அறைந்தனர் கழு மீது**

**செந்நீர் வடிந்திடவே**



# பன்னிரெண்டாம் நிலை : இயேசு சிலுவையில் நிறுத்தப்பட்டு, உயிர் விடுகிறார்



முதல்வர்:
திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

தலை வணங்குவோம்

அனைவரும்:
அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையாலே உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

# பன்னிரெண்டாம் நிலை : இயேசு சிலுவையில் நிறுத்தப்பட்டு, உயிர் விடுகிறார்



நண்பகல் பன்னிரண்டு மணிமுதல் பிற்பகல் மூன்று மணிவரை நாடு முழுவதும் இருள் உண்டாயிற்று. மூன்று மணியளவில் இயேசு, “ஏலி, ஏலி லெமா சபக்தானி!” அதாவது, “என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்!” என்று உரத்த குரலில் கத்தினார். இயேசு மீண்டும் உரத்த குரலில் கத்தி உயிர்விட்டார். நூற்றுவர் தலைவரும் அவரோடு இயேசுவைக் காவல் காத்தவர்களும் நிலநடுக்கத்தையும் நிகழ்ந்த யாவற்றையும் கண்டு மிகவும் அஞ்சி, “இவர் உண்மையாகவே இறைமகன்” என்றார்கள்.

முழந்தாளிடுவோம்

# பன்னிரெண்டாம் நிலை : இயேசு சிலுவையில் நிறுத்தப்பட்டு, உயிர் விடுகிறார்


DIOCESE OF PENANG

(எல்லோரும்)

அன்பு இயேசுவே! வானத்திற்கும் பூமிக்கும் இடையே நீர் சிலுவையில் தொங்கினீர். மனிதரைக் கடவுளின் பிள்ளைகளாக்கிட நீர் எம்மில் ஒருவராக மாறினிர். சிலுவையில் தொங்கியபோது நீர் உரைத்த சொற்களை நினைத்துப் பார்க்கிறோம். “தாகமாயிருக்கிறது” என்று கூறிய இயேசுவே, எங்கள் ஆன்ம தாகத்தை வளர்த்தருளும். “எல்லாம் நிறைவேறிற்று” என்று கூறி உயிர்நீத்த இயேசுவே, நாங்கள் கடவுளின் திருவுளத்தை இறுதிவரை நிலைத்துநின்று நிறைவேற்றிட அருள்தாரும். ஆமென்!

# பன்னிரெண்டாம் நிலை : இயேசு சிலுவையில் நிறுத்தப்பட்டு, உயிர் விடுகிறார்

உம் உயிர் பூமியை விட்டு
அகன்றது தந்தையிடம்
பாரில் இருள் சூழ்ந்து



# பதிமூன்றாம் நிலை : இயேசுவின் உடல் சிலுவையில் இருந்து இறக்கப்படுகிறது



முதல்வர்:
திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

தலை வணங்குவோம்

அனைவரும்:
அதேனென்றால்
உமது பாரமான
திருச்சிலுவையாலே உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

# பதிமூன்றாம் நிலை : இயேசுவின் உடல் சிலுவையில் இருந்து இறக்கப்படுகிறது



அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு என்பவர் இயேசுவின் சீடர்களுள் ஒருவர் யூதருக்கு அஞ்சியதால் தம்மைச் சீடர் என்று வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளாதவர். அவர் இயேசுவின் உடலை எடுத்துக் கொண்டுபோகப் பிலாத்திடம் அனுமதி கேட்டார். பிலாத்தும் அனுமதி கொடுத்தான். யோசேப்பு வந்து இயேசுவின் சடலத்தை எடுத்துக்கொண்டு போனார். முன்பு ஒருமுறை இரவில் இயேசுவிடம் வந்த நிக்கதேம் என்பவரும் அங்கு வந்து சேர்ந்தார். அவர் வெள்ளைப்போளமும் சந்தனத் தூளும் கலந்து ஏறக்குறைய முப்பது கிலோ கிராம் கொண்டுவந்தார். அவர்கள் இயேசுவின் உடலை எடுத்து யூத அடக்க முறைப்படி நறுமணப் பொருள்களுடன் துணிகளால் சுற்றிக் கட்டினார்கள்.

தனியார் பயன்பாட்டிற்கு மட்டுமே

# பதிமூன்றாம் நிலை : இயேசுவின் உடல் சிலுவையில் இருந்து இறக்கப்படுகிறது

DIOCESE OF PENANG

(எல்லோரும்)


அன்பு இயேசுவே! உயிரற்ற உம் சடலத்தை உம் அன்னை மரியா தம் மடியில் கிடத்தி அழுது புலம்பினார். அவரை எங்களுக்கு அன்னையாக அளித்ததற்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். எங்கள்மேல் கொண்ட எல்லையற்ற அன்பினால் நீர் எங்களுக்காக உயிர்துறந்தீர். உமது சாவு எங்களுக்கு வாழ்வு வழங்கிற்று. நாங்களும் உமது புகழ்ச்சிக்காகவும் பிறருடைய ஈடேற்றத்திற்காகவும் அயராது உழைத்திட அருள்வீராக. ஆமென்!

# பதிமூன்றாம் நிலை : இயேசுவின் உடல் சிலுவையில் இருந்து இறக்கப்படுகிறது

**உயிரற்ற உடலினை**

**அன்னை மடியில் சுமந்தாள்**

**வியாகுலங்களடைந் தாள்**



# பதிநான்காம் நிலை :
# இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார்



முதல்வர்:
திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

தலை வணங்குவோம்

அனைவரும்:
அதேனென்றால்
உமது பாரமான திருச்சிலுவையாலே உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

# பதிநான்காம் நிலை :
# இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார்

DIOCESE OF PENANG



அவர் சிலுவையில் அறையப்பட்டிருந்த இடத்தில் ஒருதோட்டம் இருந்தது. அங்கே புதிய கல்லறை ஒன்று இருந்தது. அதில் அதுவரை யாரும் அடக்கம் செய்யப்படவில்லை. அன்று பாஸ்கா விழாவுக்கு ஆயத்த நாளாய் இருந்ததாலும் அக்கல்லறை அருகில் இருந்ததாலும் அவர்கள் இயேசுவை அதில் அடக்கம் செய்தார்கள். கலிலேயாவிலிருந்து அவரோடு வந்திருந்த பெண்கள் பின்தொடர்ந்து சென்று கல்லறையைக் கண்டார்கள் அவருடைய உடலை வைத்த விதத்தைப் பார்த்து விட்டு, திரும்பிப் போய் நறுமணப் பொருள்களையும் நறுமணத் தைலத்தையும் ஆயத்தம் செய்தார்கள். கட்டளைப்படி, அவர்கள் ஒய்வுநாளில் ஒய்ந்திருந்தார்கள்.

DIOCESE OF PENANG
Est. 1955
MALAYSIA


# பதிநான்காம் நிலை :
# இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார்

(எல்லோரும்)

அன்பு இயேசுவே! உமது உடல் கல்லறையில் வைக்கப்பட்டாலும் மண்ணோடு மண்ணாகி அழிந்துபோகவில்லை. நாங்களும் திருமுழுக்கின் வழியாக உம்மோடு கல்லறையில் அடக்கப்பட்டோம். பாவத்திற்கு இறந்தோம். ஆனால், நீர் புத்துயிர் பெற்று எழுந்ததுபோல எங்களுக்கும் ஆன்மீக வாழ்வு அளித்து, புதிய மனிதர்களாக வாழ நீர் வழிசெய்தீர். யாம் பெற்ற வாழ்வு இவ்வையகம் பெற்று மகிழ்ந்திட அருள்வீராக. ஆமென்!

# பதிநான்காம் நிலை :
# இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார்

**ஒடுங்கிய உமதுடல்**
**அடக்கம் செய்த கல்லறை**
**உமக்கு சொந்த மன்று**



# ஆண்டவருடைய பாடுகளின் வெள்ளி

செபம் :

கருணைக்கடலே இறைவா! உம் திருமகனின் பாடுகளாலும் சிலுவை மரணத்தாலும் உமது பேரிரக்கத்தை எங்கள் மீதுபொழிந்துள்ளதற்காக உமக்கு நன்றி கூறுகிறோம். உமதுகருணையினால் எங்களை நிரப்பும். அதனால் உமது இறையரசுபாதையில் நாங்கள் நடந்து எல்லாரிடமும் உமது அன்பையும், அருளையும் பகிர்ந்து வாழ்வோம் என வாக்களிக்கின்றோம். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

# ஆண்டவருடைய பாடுகளின் வெள்ளி

*திருதந்தை கருத்திற்காக மன்றாடுவோம்:*

- விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப் பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல, மண்ணுலகிலும் நிறைவேறுக! எங்கள் அன்றாட உணவை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல, எங்கள் குற்றங்களையும் மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத் தாதேயும். தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.
- அருள் நிறைந்த மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே. பெண்களுள் ஆசீ பெற்றவர் நீரே. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர் பெற்றவரே. புனித மரியே, இறைவனின் தாயே, பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக இப்பொழுது, எங்கள் இறப்பின் வேளையிலும் வேண்டிக்கொள்ளும். ஆமென்.
- தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாகு. தொடக்கத்தில் இருந்தது போல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

# ஆண்டவருடைய பாடுகளின் வெள்ளி

பாடுகள் நீர் பட்ட போது
பாய்ந்து ஓடிய இரத்தம்
கோடி பாவம் தீர்த்து மோட்சம்
கொள்ளுவிக்க வல்லதே

3. சென்னிமேற் கொடிய யூதர்
சேர்த்து வைத்த முள்முடி
தன்னால் வடிந்த ரத்தத்தால்
சாவான பாவம் நீங்குமே

# ஆண்டவருடைய பாடுகளின் வெள்ளி

DIOCESE OF PENANG


பாடுகள் நீர் பட்ட போது
பாய்ந்து ஓடிய இரத்தம்
கோடி பாவம் தீர்த்து மோட்சம்
கொள்ளுவிக்க வல்லதே

4. ஐந்து காயத்தால் வடிந்த
அரிய ரத்தத்தினால்
மிஞ்சும் எங்கள் பாவம் தீர்க்க
வேண்டுகின்றோம் இயேசுவே

# ஆண்டவருடைய பாடுகளின் வெள்ளி

## திருச்சிலுவை ஆராதனை


**சிலுவையை நமது கைகளில் ஏந்திக்கொண்டு, தனிப்பட்ட முறையில் சிறிது நேரம் பயபக்தியுடன் அதனை உற்றுநோக்கிய பின் அடுத்த நபருக்கு கொடுக்கலாம்.**



# ஆண்டவருடைய பாடுகளின் வெள்ளி

DIOCESE OF PENANG

## திருச்சிலுவை ஆராதனை




*ஆண்டவரே யாம் உமது*
*திருச்சிலுவையை வணங்குகிறோம்*
*உம் திரு உயிர்ப்பையும் வாழ்த்துகிறோம்*
*போற்றுகிறோம்: ஏனென்றால்,*
*ஆண்டவரே, இம்மரத்தின் வழியாக*
*இவ்வுலகம் அனைத்திற்கும்*
*பெரு மகிழ்வு வந்ததுவே!*

*ஆமென்*

# புனித சனிக்கிழமை


புனித
சனிக்கிழமை
அமைதியுடன்
காத்திருப்போம்
HOLY
SATURDAY
In silence we await
Catholic.org

# புனித சனிக்கிழமை

## திருஒளி கொண்டாட்டம்

**வீட்டை இருளாக்கி, ஒரு முக்கிய மெழுகுவர்த்தியை ஏற்றி மன்றாடுவோம்...**



# புனித சனிக்கிழமை

## திருஒளி கொண்டாட்டம



**தலைவர்:**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, இந்த புனித இரவில், நீர் சாவிலிருந்து வாழ்வுக்கு கடந்துச் சென்றீர், உலகெங்கும் உள்ள உம் பிள்ளைகளை, உம் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை நினைவுகூறவும், உமது வார்த்தையை கேட்கவும் உமது மறைப்பொருளை கொண்டாடவும் ஒன்றாக அழைக்கின்றீர். இந்த நம்பிக்கையில், உம் மரணத்தின் மீது கொண்ட வெற்றியில் நாங்களும் பங்குகொண்டு உம்மோடு என்றென்றும் இறைவனில் வாழ்வோம். உமது ஒளி எங்களில் புது நம்பிக்கையை தூண்டுவதாக. எங்கள் மனங்களை தூய்மைப்படுத்தி நித்திய ஒளியின் விழாவுக்கு கொண்டு சேர்க்கவும் ஆமென்.

# புனித சனிக்கிழமை

## திருஒளி கொண்டாட்டம

**இப்போது நாம் ஒவ்வொருவரும் பிரதான மெழுகுவர்த்தியிலிருந்து நமது தனிப்பட்ட மெழுகுவவர்த்திகளை ஒளிரச்செய்து பின் வரும் செபத்தை இரு முறை மன்றாடுவோம்.**



**ஒன்றாக:**

கிறிஸ்து எங்கள் ஒளி, எங்கள் உள்ளத்தில் ஒளிரும்,
இருள் வழியாக ஒளிரும்
கிறிஸ்து எங்கள் ஒளியாகும், இங்கு கூடியிருக்கும்
உமது திருஅவைமீது, அவர்கள் எங்கிருந்தாலும்
அவர்கள் மீது ஒளிரும்.

# புனித சனிக்கிழமை

DIOCESE OF PENANG

## *திருத்தூதர் தூய பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 6: 3-11*

திருமுழுக்கினால் கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருக்கும் நாம் அனைவரும் அவருடைய சாவிலும் அவரோடு இணைந்திருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியாதா? இறந்த கிறிஸ்துவை மாட்சி மிகு தந்தை உயிர்த்தெழச் செய்தார். அவ்வாறு நாமும் புதுவாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி திருமுழுக்கின் வழியாய் அவரோடு அடக்கம் செய்யப்பட்டோம். அவர் இறந்ததுபோலவே நாமும் அவரோடு ஒன்றித்து இறந்தோமெனில், அவர் உயிர்த்தெழுந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த்தெழுவோம். நாம் இனிமேல் பாவத்துக்கு அடிமைகளாய் இராதபடி, நம்முடைய பழைய மனித இயல்பு அவரோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. இவ்வாறு பாவத்துக்கு உட்பட்டிருந்த நம் இயல்பு அழிந்து போகும். இது நமக்குத் தெரியும். ஏனெனில் இறந்தோர் பாவத்தினின்று விடுதலை பெற்றுவிட்டனர் அன்றோ? கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின், அவரோடு வாழ்வோம் என்பதே நாம் கொண்டுள்ள நம்பிக்கை. இறந்து உயிருடன் எழுப்பப்பட்ட கிறிஸ்து இனிமேல் இறக்கமாட்டார்: இனி அவர் சாவின் ஆட்சிக்கு உட்பட்டவர் அல்ல என நாம் அறிந்திருக்கிறோம். அவர் இறந்தார்: பாவத்தை ஒழிக்க ஒரே ஒருமுறை இறந்தார். இப்போது அவர் வாழ்கிறார்: அவர் கடவுளுக்காகவே வாழ்கிறார். அவ்வாறே, நீங்களும் பாவ வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் இறந்தவர்கள்: கிறிஸ்து இயேசுவோடு இணைந்து கடவுளுக்காக வாழ்கிறவர்கள் என்பதை எண்ணிக் கொள்ளுங்கள்.

**ஆண்டவரின் அருள்வாக்கு.** ***பதில்: இறைவனுக்கு நன்றி***

# புனித சனிக்கிழமை

DIOCESE OF PENANG

## திருமுழுக்கு வாக்குறதிகளை புதுப்பித்தல

**நமது மெழுகுவர்த்தியின் புதிய ஒளியிலிருந்தும் மேலும் நமது உள்ளத்திலிருந்து இப்போது நமது நம்பிக்கையை அறிவிப்போம். (இந்த வேலையில் சிறப்பான முறையில் நமது புது முக தேர்வாளர்களை (RCIA) நினைவுக்கூறுவோம்)**

விண்ணகத்தையும் மண்ணகத்தையும், படைத்த எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளை நம்புகிறேன். அவருடைய ஒரே மகனாகிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நம்புகின்றேன். இவர் தூய ஆவியால் கருவுற்று, கன்னி மரியிடமிருந்து பிறந்தார். பொந்தியு பிலாத்ததுவின் அதிகாரத்தில் பாடுபட்டுச் சிலுவையில் அறையப்பட்டு, இறந்து, அடக்கம் செய்யப்பட்டார். பாதாளத்தில் இறங்கி, மூன்றாம் நாள் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார்.

விண்ணகத்துக்கு எழுந்தருளி, எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளின் வலப் பக்கத்தில் வீற்றிருக்கின்றார். அங்கிருந்து வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் தீர்ப்பு வழங்க வருவார்.

தூய ஆவியாரை நம்புகிறேன். புனித, கத்தோலிக்க, திரு அவையை நம்புகிறேன். புனிதர்களின் உறவு ஒன்றிப்பை நம்புகின்றோம் பாவ மன்னிப்பை நம்புகின்றோம். உடலின் உயிர்ப்பை நம்புகின்றேன். நிலைவாழ்வை நம்புகின்றேன். ஆமென்.

# புனித சனிக்கிழமை

ஊற்றுத் தண்ணீரே எந்தன் தேவ ஆவியே
ஜீவ நதியே என்னில் பொங்கிப் பொங்கி வா (2)
ஆசீர்வதியும் என் நேச கர்த்தரே - 2
ஆவியின் வரங்களினால் என்னை நிரப்பும் - 2

1. கன்மலையைப் பிளந்து வனாந்தரத்திலே
கர்த்தாவே உம் ஜனங்களின் தாகம் தீர்த்தீரே (2)
பள்ளத்தாக்கிலும் மலைகளிலும் -2
தண்ணீர் பாயும் தேசத்தை நீர் வாக்களித்தீரே -2

2. ஜீவத்தண்ணீராம் எந்தன் நல்ல கர்த்தரே
ஜீவ ஊற்றினால் என்னை நிறைத்திடுமே (2)
கனிதந்திட நான் செழித்தோங்கிட -2
கர்த்தரின் கரத்தால் நித்தம் கனம்பெற்றிட -2

3. இரட்சிப்பின் ஊற்றுகள் எந்தன் சபைதனிலே
எழும்பிட இந்த வேளை இரங்கிடுமே (2)
ஆத்ம பாரமும் பரிசுத்தமும் -2
ஆவலுடன் பெற்றிட வரம் தாருமே -2

DIOCESE OF PENANG
MALAYSIA

# பாஸ்கா ஞாயிறு



# பாஸ்கா ஞாயிறு

## ஆகமகிழ்வோம்! இயேசு கிறிஸ்து இன்று உயிர்த்தெழுந்தார் அல்லேலூயா!

சொன்னபடி உயிர்தெழுந்தார்
சொல் தவறா நம் இயேசு-2
அல்லேலூயா ஆனந்தமே அன்பர் இயேசு உயிர்த்தெழுந்தார் -2
சாவே உன் வெற்றி எங்கே சாவே உன் கொடுக்கு எங்கே -2

1. சாவு வீழ்ந்தது வெற்றி கிடைத்தது
சகல அதிகாரம் நமக்கு உண்டு

2. விண்ணும் ஒழிந்து போகும் மண்ணும் மறைந்து போகும் -2
ஆண்டவர் வாக்கு இன்றும் என்றும் அழியாதது மாறாதது

# பாஸ்கா ஞாயிறு

DIOCESE OF PENANG

† *தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே, ஆமென்* †

(எல்லோரும்)

**மகத்துவமிக்க இறைவா, இந்நாளில் உம்முடைய ஒரே மகன் வழியாகச் சாவை வென்று, நிலைவாழ்வின் கதவை எங்களுக்கு மீண்டும் திறந்தீர். எங்கள் ஆண்டவர் உயிர்த்தெழுந்ததை அக்களிப்போடு பெருவிழா கொண்டாடும் நாங்கள் உம்முடைய தூய ஆவியால் புதுப்பிக்கப்பெற்று, ஒளிமிக்க அருள்வாழ்வுக்கு உயிர்த்தெழச் செய்வீராக.**

# பாஸ்கா ஞாயிறு

DIOCESE OF PENANG

## புனித யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 20: 1-9

வாரத்தின் முதல் நாளன்று விடியற் காலையில் இருள் நீங்கும் முன்பே மகதலா மரியா கல்லறைக்குச் சென்றார்; கல்லறை வாயிலில் இருந்த கல் அகற்றப்பட்டிருப்பதைக் கண்டார். எனவே அவர் சீமோன் பேதுருவிடமும் இயேசு தனி அன்பு கொண்டிருந்த மற்றச் சீடரிடமும் வந்து, ' ஆண்டவரைக் கல்லறையிலிருந்து யாரோ எடுத்துக் கொண்டு போய் விட்டனர்; அவரை எங்கே கொண்டு வைத்தனரோ, எங்களுக்குத் தெரியவில்லை! ' என்றார். இதைக் கேட்ட பேதுருவும் மற்றச் சீடரும் கல்லறைக்குப் புறப்பட்டனர். இருவரும் ஒருமித்து ஓடினர். மற்றச் சீடர் பேதுருவை விட விரைவாக ஓடி முதலில் கல்லறையை அடைந்தார். அவர் குனிந்து பார்த்தபோது துணிகள் கிடப்பதைக் கண்டார்; ஆனால் உள்ளே நுழையவில்லை. அவருக்குப் பின்னாலேயே சீமோன் பேதுருவும் வந்தார். நேரே அவர் கல்லறைக்குள் நுழைந்தார். அங்குத் துணிகளையும், இயேசுவின் தலையை மூடியிருந்த துண்டையும் கண்டார். அத்துண்டு மற்றத் துணிகளோடு இல்லாமல் ஓரிடத்தில் தனியாகச் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. பின்னர், கல்லறைக்கு முதலில் வந்து சேர்ந்த மற்றச் சீடரும் உள்ளே சென்றார், கண்டார்; நம்பினார். இயேசு இறந்து உயிர்த்தெழ வேண்டும் என்னும் மறைநூல் வாக்கை அவர்கள் அதுவரை புரிந்துகொள்ளவில்லை.

**ஆண்டவரின் அருள்வாக்கு.**

***பதில்: இறைவனுக்கு நன்றி***

# பாஸ்கா ஞாயிறு

## ஒரு நிமிட சிந்தனை

ஈஸ்டர் என்பது ஒளி, வாழ்க்கை மற்றும் சுதந்திரத்தின் கொண்டாட்டம். கிறிஸ்து இயேசுவில் ஈஸ்ட்டர் நமக்கு புது நம்பிக்கை புது வாழ்வு தருகின்றது.

நமது வாழ்க்கையை ஈஸ்ட்டர் மக்களாக வாழ்கிறோமா? ஈஸ்ட்டர் மகிழ்ச்சியை நம்மில் தொடங்கி நாம் ஒருவர் மற்றவருடன் பகிர்ந்துக்கொள்கிறோமா?

சிறிய விவரங்களுடன் தொடங்கி இன்று எனது வாழ்க்கையை மீண்டும் புதிதாகத் தொடங்குவேன். நான் பெற்ற ஆசீர்வாதங்களை எண்ணி, என் வாழ்க்கையை முழுமையாக வாழ்வதன் மூலம் கடவுளை மகிமைப்படுத்துவேன்.

# பாஸ்கா ஞாயிறு

சிலுவையில் அறையுண்ட மெசியா

சிலுவையில் அறையுண்ட மெசியா
இறைவல்லமையும் இறைஞானமுமாய் உள்ளார்
இதை உள்ளங்கள் உணர்ந்திடட்டும் - இந்த
உலகமும் உணர்ந்திடட்டும்
அல்லேலூ அல்லேலூ அல்லேலூயா -4

# பாஸ்கா ஞாயிறு

1. நெஞ்சினில் அமைதியை இழக்கின்றோம் - மன
நிம்மதி இழந்தே தவிக்கின்றோம்
நோவிலும் சாவிலும் துடிக்கின்றோம் - எங்கள்
தேவனே சிலுவையின் பொருள் சொல்வாய்
இந்தச் சிலுவை உமது வல்லமையோ
இந்தச் சிலுவை உமது ஞானமோ (2) அல்லேலூ...

சிலுவையில் அறையுண்ட மெசியா

# பாஸ்கா ஞாயிறு

2. உறவுகள் நிறைவு தருவதில்லை எங்கள்
உள்ளத்தில் அன்பு வளர்வதில்லை
பிரிவுகள் பிளவுகள் பிணக்குகளே எங்கள்
வீட்டிலும் நாட்டிலும் வளர்வது ஏன்
இந்தச் சிலுவை உமது வல்லமையோ
இந்தச் சிலுவை உமது ஞானமோ (2) அல்லேலூ...

சிலுவையில் அறையுண்ட மெசியா

# எங்கள் பாஸ்கா மன்றாட்டு

இந்நாளிலே, அன்புமிக்க இறைவா, நாங்கள் மீண்டும் அல்லேலூயா பாடுகிறோம்
இயேசுவை சாவிலிருந்து உயிர்த்தெழச்செய்ததற்காக உம்மை புகழ்கிறோம் நன்றிகூறுகிறோம்
உமது அருளால் பலமுறை எங்களை எழச்செய்ததற்காக உம்மை புகழ்கிறோம் நன்றிகூறுகிறோம்
இந்த பாஸ்கா காலத்திலும் மற்றும் எப்பொழுதும், சிறந்த தீர்மானங்களை செய்ய முடியாமல் பலவீனர்களாக இருக்கின்றோம்:
பயத்தாலும் நிச்சயமற்ற தன்மைகளை எதிர்கொள்ளும்போது,
பயத்தாலும் ஊக்கமில்லாமலும் இருக்கையில் நீர் எங்களை பலப்படுத்துகிறீர் என்பதை மறந்து விழுகிறோம்
நாங்கள் பிடிவாதமாக இருக்கும்போதும் மற்றவர்களை மன்னிக்க மறுக்கும்பேததும்
நாங்கள் சுயநலவாதிகளாகவும் சோர்வாகவும் இருக்கும்போது
நாங்கள் இயேசுவை பின்பற்ற வேண்டும்
எங்களை எழுப்பும், அன்பு இறைவனே, எங்களை எழுப்பும்
இயேசுவில் எங்களுக்கு புதிய வாழ்க்கையை வழங்கியதற்கும், இந்த ஈஸ்ட்டர் நேரத்திலும் எப்போதும் நம்மிடையே அவர் இருப்பதற்கும் நன்றி. ஆமென்.

# உயிர்த்த ஆண்டவரின் ஈஸ்ட்டர் நல் வாழ்த்துக்கள்

எதிர்நோக்கி இருப்பதில் மகிழ்ச்சி கொள்ளுங்கள்: துன்பத்தில் தளரா மனத்துடன் இருங்கள்: இறைவேண்டலில் நிலைத்திருங்கள்.

*(உரோ 12: 12)*